# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

…………….

**வழக்கு எண். SA6102/F/2019**

**திரு S.அபுபக்கர் … மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை கண்காணிப்பாளர்,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001. … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **16.10.2018** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **13.05.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **01.07.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S.அபுபக்கர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமை கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **16.10.2018** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விசாரணை கூட்டத்தில் யாசின் முகம்மது அவர்களாலும், அவருடைய வழக்கறிஞராலும், தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல், விசாரணை கூட்டத்திலோ அல்லது அதற்கு முன்பாகவோ அல்லது அதற்குபின்பாகவோ புளியங்குளம் ஜமா அத் பள்ளிவாசல் கான்மியான் அவுலியாக்கள் தர்ஹா ஆகியவற்றின் வரவு - செலவு கணக்கு கொடுத்துள்ளாரா அப்படி கொடுத்திருந்தால் அதனுடைய நகல், மேலும் சகாயத்தொகை கட்டியுள்ளாரா அப்படி கட்டியிருந்தால் அதற்கான நகல், எந்த அடிப்படையில் கட்டியுள்ளார் என்ற கேள்விக்கு பதில், புளியங்குளம் கான்மியான் அவுலியாக்கள் தர்ஹா, தர்ஹா வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புளியங்குளம் ஜமாஅத் பள்ளிவாசல் சம்பந்தமாக நிர்வாக குழு சம்பந்தமாக இயற்றப்பட்ட தீர்மான நகல், வாரியக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் முதன்மை செயல் அலுவலர் அவர்களால் வெளியிடப்பட்ட செயல்முறை ஆணையின் நகல் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ உதவி செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 13.05.2019 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 01.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

- **இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, தான் கோரிய தகவலை தனக்கு பொதுத் தகவல் அலுவலர் முழுமையாக வழங்கியதாகவும் எனவே இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீது எந்த மேல்நடவடிக்கையும் தேவையில்லை எனவும் தொலைபேசி வாயிலாக ஆணையத்தில் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரும் மேல்முறையீட்டாளருக்கு தகவல்கள் முழுமையாக வழங்கப்பட்டுவிட்டதாக ஆணையத்தில் தெரிவித்தார். ஆணையம் அதனை பதிவு செய்து மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA6102/F/2019**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை கண்காணிப்பாளர்,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001.**

**மனுதாரர்**
**திரு S.அபுபக்கர்,**
**எண்.2/31, முஸ்லீம் முதல் தெரு,**
**புளியங்குளம், சிலைமான் (வழி)**
**மதுரை தெற்கு வட்டம்,**
**மதுரை மாவட்டம் - 625 201.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020